பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆவணி 17 திங்கட்கிழமை (02-09-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 272

# புலிகளுடன் பேச தொண்டா இவ்வாரம் யாழ். வரவிருந்தார்!

## பிரேமாவுக்கு ஆதரவாக மற்றொரு பிரேரணை!

கொழும்பு, செப். 2

ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு நம்பிக்கை தெரிவிக்கும் பிரேரணை ஒன்று இன்று நடைபெறும் அரசாங்க நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் கொண்டு வரப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நம்பிக்கைப் பிரேரணை ஏற்கனவே வரையப்பட்டிருப்பதாகவும்—

தேவையான அளவு எம். பிக்களின் கையொப்பம் அப்பிரேரணைக்கு கிடைத்ததும் அது சபாநாயகரிடம் கையளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அதனைத் தொடர்ந்து—

ஜனாதிபதியை பதவி நீக்கம் செய்யக்கோரி சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் பிரேரணையைச் செல்லுபடியற்றதாக்கும்படி சபாநாயகருக்குக் கோரிக்கை விடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது (உ-எ).

## தமிழ் எம். பிக்களை இந்தியா வற்புறுத்தியது

### மேற்கு நாடுகளும் பிரேமாவுக்கு எதிர்

கொழும்பு, செப். 2

பிரேமாவை பதவி நீக்கக் கோரும் பிரேரணையில் கையெழுத்திடும்படி சில தமிழ் எம். பிக்களை இந்தியத் தரப்பு வற்புறுத்தியதாம்.

இதேவேளை இந்தப் பிரேரணைக்கு மேற்குலக— பொருளாதார சக்தி மிக்க— நாடுகளிடம் இருந்தும் ''ஆசிர்வாதம்'' கிடைத்திருக்கிறது.

—இவ்வாறு கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றின் நேற்றைய பதிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ)

## இந்தியாவில் வைத்தே காமினி - அனுரா திட்டம்

கொழும்பு, செப். 2

ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு எதிராகப் பிரேரணை கொண்டு வருவதற்கான முயற்சிகள் மார்ச், ஏப்ரல் மாதங்களிலேயே கருக்கட்டியதாக அறியவந்துள்ளது.

முதலில் திரு. காமினி திசநாயக்கா அமைச்சர் அத்துலத் முதலியைச் சந்தித்தார்.

தமக்குள் இருக்கும் கருத்து வேற்றுமைகளை கைவிட்டு, பிரேமதாசாவின் சர்வாதிகாரப் பிடியில் இருந்து நாட்டை விடுவிக்கவேண்டும் என்று திரு. காமினி அப்போது கேட்டுக் கொண்டாராம்.

அத்துலத் முதலியின் சம்மதம் கிடைத்த பின்னர்—

ராஜீவ் காந்தியின் மரணச் சடங்கில் கலந்து கொள்ளப் புதுடில்லி சென்றவேளை, திரு. அனுரா பண்டாரநாயக்காவுடன் இது விடயம் பற்றி காமினி கலந்துரையாடினார்.

அதன் பின்னர் மூவரும் அடிக்கடி சந்தித்து தங்கள் முயற்சியைப் பல வழிகளாலும் முன்னெடுத்தனர். கடந்த செவ்வாய் வரை அவர்களின் செயற்பாடு இரகசியமாக வைக்கப் பட்டிருந்தது. — இப்படி கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (அ)

## மற்றோர் அமைச்சரும் நேற்று இராஜினாமா!

கொழும்பு, செப். 2

ஜனாதிபதி பிரேமதாஸாவைப் பதவி நீக்கம் செய்யக் கோரும் பிரேரணையில் கையெழுத்திட்டவர்களில் ஒருவரான துணை அமைச்சர் சந்திரா கங்கந்த நேற்று ராஜினாமாச் செய்தார்.

அவரது பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதி ஏற்றுக் கொண்டார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

திரு. பிரேமதாஸாவின் தலைமையை எதிர்த்து லலித் அத்துலத் முதலி, பிரேமச்சந்திர, லக்ஷ்மன் செனிவிரத்ன ஆகியோர் தமது அமைச்சரவைப் பதவிகளை ஏற்கனவே இராஜினாமாச் செய்துள்ளனர் என்பது தெரிந்ததே. (உ-எ-த)

## தெற்கு அரசியல் நெருக்கடியால் விஜயம் தள்ளிவைக்கப்பட்டதாம்!

கொழும்பு, செப். 2

விடுதலைப் புலிகளுடன் புதிதாகப் பேச்சுக்களைத் தொடங்குவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள், கொழும்பில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடிகளை அடுத்து செயல் இழந்து போகும் நிலை ஏற்பட்டிருப்பதாக உயர் பாதுகாப்பு அதிகாரிகள் கவலை தெரிவித்திருக்கின்றனர்.

விடுதலைப் புலிகளுடன் முதற்கட்டப் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்காக அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் இவ்வாரம் வடமாகாணத்துக்கு மேற்கொள்ளவிருந்த விஜயம், அரசியல் நெருக்கடிகளை அடுத்து தடைப்பட்டிருப்பதாக அரசியல் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

—இவ்வாறு நேற்று கொழும்பில் வெளியான ''சண்டேரைம்ஸ்'' ஆங்கில வார இதழின் முன்பக்க செய்தியில் தெரிவிக்கப்படிருக்கிறது. அச்செய்தியில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

அரசு — புலிகள் பேச்சுக்கு இடைத் தொடர்பாளராக விடுதலைப் புலிகளினால் நியமிக்கப்பட்டிருக்கும் திரு. எஸ். தொண்டமான், விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்தினரைச் சந்தித்து அவர்களுடன் பேச்சு நடத்த அரசு விருப்பமாக இருக்கிறது என்பதை அவர்களுக்குத் தெரியப்படுத்த திட்டமிட்டிருந்தார் என்று அரசியல் வட்டாரங்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## அரசியல் நெருக்கடியால் தீர்வு முயற்சியில் தாமதம்

### அமைச்சர் தொண்டா கூறுகிறார்

கொழும்பு, செப். 2

ஜனாதிபதி பிரேமதாஸாவை பதவி நீக்கக் கோரும் பிரேரணை இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சூழ்நிலையைக் குழப்பும் ஒரு முயற்சியாக அமைகிறது.

—இப்படிக் கூறினார் இ. தொ. கா. தலைவரும் அமைச்சருமான திரு. எஸ். தொண்டமான்.

தற்போதைய நெருக்கடியில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் நிதானமாகச் செயல்படும் என்றும் அவர் சொன்னார். [உ-ஒ-எ]

## 5 மெ. தொன் சவர்க்காரம் வடக்கே வந்து சேரும்

### அரச அதிபர் கொழும்பில் பேச்சு

கொழும்பு, செப். 2

யாழ், அரச அதிபர் கொழும்பில் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்துடன் நடத்திய பேச்சுவார்த்தையை அடுத்து, கப்பலில் 5 மெற்றிக் தொன் சவர்க்காரம் வட பகுதிக்கு அனுப்ப முடிவாகியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் நிலவும் உணவுப் பற்றாக்குறை மற்றும் அத்தியாவசிய பொருள்களுக்கான பற்றாக்குறை பற்றி அரச அதிபர் விளக்கிக் கூறியுள்ளார்.

வட பகுதிக்கு மண்ணெண்ணெய் அனுப்புவது தொடர்பாக அரச அதிபர் இன்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்கவுடன் பேச்சு நடத்த உள்ளார். [ஒ]

## ஸ்ரீலங்கா கடற்படை சூடு! 4 இந்திய மீனவர் காயம்!!

கச்சதீவுப் பகுதியில் மீன் பிடித்துக்கொண்டிருந்த இந்திய மீனவர்கள் மீது ஸ்ரீலங்கா கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இச்சம்பவத்தில் படுகாயமடைந்த நான்கு மீனவர்கள் இராமேஸ்வரம் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். [illegible] டுள்ளனர் ஸ்ரீலங்கா கடற்படையினரால் தொடர்ந்து தமிழக மீனவர்கள் தாக்கப்பட்டு வருகின்றனர் என்றும்—

எனவே அந்த நாட்டு அரசுடன் இந்திய மத்திய அரசு உடனடியாக இது குறித்து பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் என்றும்—

தமிழ்நாடு முதலமைச்சர் [illegible] ஜெயலலிதா கோரிக்கை விடுத்துள்ளார். [இ-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊரடங்கு

கொழும்பு, செப். 2

முல்லைத்தீவு மாவட்டத்திலும் வவுனியா மாவட்டத்தில் நெடுங்கேணி மற்றும் செட்டிகுளம் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் நேற்றுப் பிற்பகல் 1-45 மணிமுதல் ஊரடங்குச் சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்திருக்கிறது. (இ-எ)

## காத்தான்குடியில் குண்டுவெடிப்பு! நால்வர் மரணம்!!

கொழும்பு, செப். 2

முஸ்லிம் பகுதியான காத்தான் குடியில் நேற்று மாலை இடம்பெற்ற கார்க் குண்டு வெடிப்பில் நான்கு பொது மக்கள் உயிரிழந்தனர்.

சன நெரிசல் மிக்க இடத்தில் நிறுத்தப்படிருந்த காரில் வைக்கப்பட்டிருந்த குண்டே வெடித்ததாகக் கூறப்படுகிறது.

## சர்வகட்சி மாநாடு

கொழும்பு, செப். 2

ஜனாதிபதி பிரேமதாஸா தலைமையில் சர்வகட்சி மாநாடு நாளை செவ்வாய்க்கிழமை மீண்டும் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்படுகிறது. [த-எ]

## 116 எம். பிக்களின் ஆதரவு பிரேமாவுக்கு உள்ளதாம்!

கொழும்பு, செப். 2

தனது அரசுக்கு ஆளும் ஐ. தே. கவின் எம். பிக்கள் 125 பேரில் 116 பேரின் ஆதரவு இருப்பதாக பிரதமர் டி. பி. விஜேதுங்கா அறிவித்திருக்கிறார்.

இதற்கிடையில்—

பிரேமாவைப் பதவிநீக்கக் கோரும் பிரேரணைக்கு ஆதரவாகக் கையெழுத்திட்டிருக்கும் ஆளும் கட்சி எம். பிக்களின் பெயர்களைத் தாம் இப்போது வெளியிடப்போவதில்லை என்று திரு. லலித் அத்துலத் முதலி தெரிவித்தார். (உ-எ)

## 3 வாரங்களுக்கு மட்டுமே சபை ஒத்திவைப்பு ஏன்?

கொழும்பு, செப். 2

நாடாளுமன்றக் கூட்டத்தொடரை இரண்டு மாதங்களுக்கு இடைநிறுத்தி வைப்பதற்கு அரசமைப்பின் கீழ், தமக்கு அதிகாரம் இருந்தும், ஜனாதிபதி பிரேமதாஸா, நாடாளுமன்றை மூன்று வாரங்களுக்கே இடைநிறுத்தி வைக்க முடிந்தது.

மாதாந்த அவசரகாலச் சட்டநீடிப்புப் பிரேரணை அதற்குள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகாலச் சட்டத்தை தெற்கில் நீடிக்க விடோம்!

### அனுரா கூறுகிறார் இப்படி

கொழும்பு, செப். 2

அவசரகாலச் சட்டத்தை நீடிக்க முடியாத வகையில், எதிரணியினரும் ஆளும் கட்சியின் அதிருப்தியாளர் குழுவினரும் நாடாளுமன்றத்தில் வாக்களிப்பர்.

சுதந்திரக் கட்சி எம். பி. திரு. அனுரா பண்டாரநாயக்கா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கிற்கு வெளியில் அவசரகாலச் சட்டத்தை நீடிக்க நாம் அனுமதிக்க மாட்டோம் — என்றார் அவர்.

ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு எதிரான எம். பிக்கள் குழு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலம் பெற்றிருப்பதாகக் கூறப்படுவதால், அவசரகாலச் சட்ட நீடிப்பு விவகாரம் சிக்கலாகியிருப்பதாக முன்னரே செய்திகள் வெளியானது தெரிந்ததே.

எதிர்வரும் 24 ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும் பட்சத்தில் அவசரகாலச் சட்ட நீடிப்புப் பிரேரணை வாக்களிப்புக்கு வரும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தேவை

எலுமிச்சை, மா போன்ற நாற்றுகள் உண்டு பண்ணக் கூடிய வெற்றுத் தசரப்பேணிகள் மற்றும் ஜாம் போத்தல்கள், ஜாம் போத்தல் மூடிகள் தேவை. தொடர்பு: சைவ வித்தியா விருத்திச் சங்கம், கலாசாலை வீதி. திருநெல்வேலி. (சி-0390)

### மணமகன் தேவை

26 வயது, 27 வயதுடைய ஆசிரியைகள் இருவருக்கு ஆசிரியர், அரச ஊழியர், கல்வி கற்று தனித்தொழில் புரிகின்ற 28 — 36 வயதுக் குட்பட்ட இந்து மணமக்கள் தேவை. தமிழீழத்தில் கடமை புரிபவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்கவும். தொடர்பு: இல. 813, C/o உதயன். (4274)

யாழ். இந்து, சைவபோசன B. Sc. ஆசிரியைகளுக்கு சைவ போசன மணமகன்மார் தேவை. ABCDE, 328, நாவலர் றோட், ஆனைப்பந்தி. (17986)

### மணப்பெண் தேவை

யாழ். இந்து, 33 வயது கணக்காளருக்கும், 36வயது விரிவுரையாளருக்கும் ஸ்பொன்சர் பண்ணக் கூடிய பெண்ணும், 39 வயது B Sc. சிவில் பொறியியலாளருக்கும், 40 வயது செவ்வாய்க்குற்றமுள்ள வியாபாரிக்கும் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். (17989)

யாழ். இந்து, 39 வயது B. Sc. ஆசிரியருக்கும், 35 வயது B. Sc. ஆசிரியருக்கும், 28 வயது கத்தோலிக்க B. Com. ஆசிரியருக்கும், 52 வயது இந்து ஆசிரியருக்கும், 36 வயது செவ்வாய்க் குற்றமுள்ள வியாபாரிக்கும் தேவை. மங்கள ஏஜென்சி, யாழ்ப்பாணம். (17990)

### மணமகள் தேவை

யாழ். இந்து, 30 வயது பொறியியல் படித்த, கனடா பிரஜை உரிமை பெற்ற மணமகனுக்கு படித்த, அழகான 5 வயது வித்தியாசத்தில் மணமகள் தேவை. சீதனம் கவனிக்கப்பட மாட்டாது. நட்சத்திரம்: மிருகசீரிடம். ABCDE, 328, நாவலர் றோட், ஆனைப்பந்தி. (17985)

### ரைப்ரைட்டர்

Typewriters தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும் சிறந்த முறையில் திருத்தவும், தமிழ் - ஆங்கில தட்டச்சு வேலைகளுக்கும்; பியூடோ, 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம். (சி-0290)

### இடமாற்றம்

வேலணையிலும், யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியிலும் இயங்கி வந்த நடனமுருகன் வைத்திய நிலையம் தற்காலிகமாக ஆஸ்பத்திரி வீதி [76] 222 ஆம் இலக்கக் கட்டடத்தில் [சத்திரச் சந்திக்குகாமையில்] இடமாற்றப்பட்டுள்ளது. வைத்தியர்:- கந்தையா நவரத்தினம். (17684)

### விண்ணப்பப்படிவம்

கல்லூரி ஆசிரியர்களுக்கான Incentive Allowance விண்ணப்பப் படிவங்கள் விற்பனைக்குண்டு. படிவம் ஒன்று ரூபா 2.50. அருண் அச்சகம், 2 ஆம் ஒழுங்கை, (ஷப்றா நிதி நிறுவனத்திற்கு அருகாமை) மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி/0436)

### தவறிவிட்டது

புஸ்பமலர் ஆகிய எனது அடையாள அட்டை [675862737V] கொழும்பு செல்லும் பாஸ், பணம் மணி பேர்சுடன் கேரதீவில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (சி-0452)

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், பீனிசம், தலையிடி, தலைகாலவியல், சூதக்குத்து, சரும நோய்கள் மற்றும் சகல வியாதிகளையும் குணப்படுத்துவார் வேலணை வைத்தியர், சி. இராசரத்தினம், 121, 2 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (4265)

### வைத்திய சேவை

Dr. அல்போன்ஸ் அத்தனாசியார் பண்டத்தரிப்பில் 18 - 8 - 91 தொடக்கம் திரும்பவும் தமது வைத்திய சேவையை ஆரம்பித்திருக்கிறார். (17981)

### APPLIED MATHEMATICS

G.C.E. A/L மாணவர்களுக்குரியவை. வேக - நேரவளையி, சார்பு வேகம், தொடர்பு ஆர்முடுகல், ஆப்பு, எறியம், நீர்நிலையியல் ஆகிய பகுதிகள் அடங்கியவை. ஆக்கியோர்: P. வேலாயுதம் B Sc. [லெக்டர்], S. பிரேம்நாத் B.Sc கிடைக்குமிடம்: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (சி-0434)

### பாடப் புத்தகம்

O/L. A/L மாணவர்கள் இலகுவில் ஆங்கிலம் கற்க, கற்பிக்க கைநூலாக 'ஈசி இங்கிலிஷ்' (Easy English) வெளிவந்துள்ளது. 1 ஆம், 5ஆம் பகுதிகள் தமிழ்மொழி பெயர்ப்புடன் புத்தக நிலையங்களில் விற்பனைக்குண்டு. (17999)

### சோதிடம்

சந்தித்துப் பாருங்கள்; வேலணை சோதிடர் V.A சிவராசா 152 B, அரசடி றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். ஜாதகம் கணிக்க, பலன் பார்க்க, திருமணப் பொருத்தம், அதிர்ஷ்ட எண்களில் பெயரமைக்க, வெளிநாடு செல்ல. (18001)

## ஆங்கில நிகழ்ச்சி திட்டம்

01 - 09 - 91ஆம் திகதி உதயனில் வெளிவந்த ஆங்கில நிகழ்ச்சித் திட்டம் [TACEP] பற்றிய விளம்பரத்தின் தலைப்பை-

ஆசிரியர்களுக்கும், எழுதுவினைஞர்களுக்கும், பாடசாலையிலிருந்து வெளியேறிய மாணவர்களுக்குமான ஆங்கில நிகழ்ச்சித் திட்டம் என்று வாசிக்கவும்.

## உணவுப் பொருளுடன் செஞ்சிலுவைக் கப்பல்

கொழும்பு, செப். 2

வட பகுதிக்குத் தேவையான உணவுப் பொருள்களையும், மருந்துப் பொருள்களையும் ஏற்றிக் கொண்டு ''மிர்த்குமாரி'' என்னும் செஞ்சிலுவைச் சங்க கப்பல் ஒன்று கடந்த வியாழக்கிழமை கொழும்புத் துறைமுகத்தில் இருந்து புறப்பட்டுள்ளது என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (த)

---

## கலை, வர்த்தகக் கல்லூரி
### (பட்டப் படிப்புகள் பிரிவு)
### யாழ். பல்கலைக்கழக வெளிவாரி
## பட்டப்படிப்புகள் 91/92

(I) வணிக முதற் தேர்வு- First in Com.
(II) கலைத் தேர்வு- G. A. Q.

மேற்படி பட்டப் படிப்புகளுக்கான விரிவுரைகள் 14 - 09 - 1991 மு. ப. 8 - 00 மணிக்கு ஆரம்பமாகும்.

கணக்கியல் - ஸ்ரீ B. Com. [Hons]

குறிப்பு: [I] முழுப்பாடத்திட்டமும் முடிக்கப்படும்.
[II] அச்சடித்த பாடக் குறிப்புகள் வழங்கப்படும்.
[III] விரிவுரைகளில் கலந்து கொள்ள விரும்பும் மாணவர்கள் தமது பெயர்களை முன்கூட்டியே பதிவு செய்துகொள்ளவும்.

பட்டப்படிப்புகள் பிரிவு,
**கலை, வர்த்தகக் கல்லூரி,**
(C. C. A.)
வெலிங்டன் சந்திக்கு அருகாமை,
யாழ்ப்பாணம்.

(சி/0422)

---

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 09 — 10 — 1930

மறைவு: 26 — 08 — 1989

## சுப்பையா - கந்தசாமி

திதி: 02 — 09 — 1991

எங்கள் பாச தீபமே!
குடும்ப முன்னேற்றத்தின் வேகம்,
ஆசை மனைவியிடமும்
அருமை மக்களிடமும் காட்டிய பாசத்தின் வேகம்,
பேரப்பிள்ளைகளை சீராட்டி, பாராட்டி
வளர்ப்பதில் வேகம்,
59 வயதில் உங்கள் முடிவை வேகமாக
ஓட்டிக்கொண்டாலும்
உங்கள் நினைவை வேகமாக ஓட்ட
முடியாமல் தவிக்கும்;

ஆசை மனைவி, மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், மாமி, மச்சான்.

109/2, சட்டநாதர் கோவிலடி,
கல்வியங்காடு. [17964]

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 26 — 03 — 1963

உதிர்வு: 03 — 08 — 1991

## திருமதி லிங்கேஸ்வரி ஜீவபாலன்
### [அம்பிகா]

நீண்டதோர் வாழ்வில் நிலைத்து வாழ்வீர் என்றிருந்தோம். மனக்கோட்டைகள் பல கட்டினோம் அம்பிகா. மனம் பூரித்தோம் ஆனால் அணைந்ததீபமாய் போனதே. உடைந்த சிலையானதே வாழ்வு.

உமது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

உமது பிரிவால் வாடும்;

அன்புக்கணவன், மாமா, மாமி,
அம்மா, அண்ணன், அக்காமார்,
மைத்துனர்மார், மைத்துனிமார்,
தங்கை மக்கள், மருமக்கள்,
உறவினர்கள்.

G. P. S. [illegible]
கல்வியங்காடு. [17997]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

---

## திருவழிபாட்டு ஓவியக் கண்காட்சி 1991

மேற்படி ஓவியக் கண்காட்சி எதிர்வரும் செப்டம்பர் 5 ஆம், 6 ஆம், 7 ஆம் திகதிகளில் யாழ். மறைக்கல்வி நிலையத்தில் இடம்பெறும். பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நேரம்:- காலை 9.00 — மாலை 5.00

அன்பளிப்பு:- ரூபா 2 00.

(4277) -அருள்திரு. ஜே. நீக்கிலஸ்.

---

## ஓராண்டு நினைவஞ்சலி



ஜனனம்: 08 — 12 — 1941

மரணம்: 13 — 09 — 1990

அமரர்
## கந்தையா கோபாலபிள்ளை [J.P.]
(பிரபல வர்த்தகரும், கோபால் அன்சன்ஸ் உரிமையாளரும்)

நல்லோனாய் வாழ்ந்தாய் - நீ
நானிலத்துப் பெயரெடுத்தாய்
வல்லோனாய் வாழ்வித்தாய்
நலம்பேணிக் குலம் காத்தாய்
சொல்லாமல் சென்று விட்டாய்
சோகமதை தந்து சென்றாய்
வல்லோன் வகுத்த விதி
வாட்டுதே எம்மை நிதம்.

உங்கள் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல விநாயகரின் திருவடியைப் போற்றி நிற்கின்றோம்.

உங்களின் பிரிவால் வாடும்:
அன்பு மனைவி, அருமை மக்கள்,
தாய், சகோதரர்கள்.

20/5, வைரவர் கோயில் வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம். [4276]

---

## ஓராண்டு நினைவஞ்சலி



வீர ஜனனம்: 31 — 07 — 1973

வீர மரணம்: 02 — 09 — 1990

## சிவலிங்கநாதன் சிவசங்கர்
### (மிரேஸ்)

எதிரிகளை நீ விரட்ட - எல்லை
முல்லையிலே போரிட்டாய்
தொல்லை தரும் தீயவரை - நீ
வெல்லும் வரை போரிட்டாய்
கயவர்களை ஒழிப்பதற்கு - மிரேஸ்
உயிர் கொடுத்து ஒளியானாய்.

முல்லையிலே 02 - 09 - 90 அன்று ஸ்ரீலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலில் எமது மகனுடன் உயிர் நீத்த ஏனைய முப்பத்தாறு வீரவேங்கைகளுக்கும் அஞ்சலி செலுத்துகின்றோம்.

உன் பிரிவை நினைவு கூரும்:
அப்பா, அம்மா, தங்கை
மற்றும் உறவினர்கள்.

வல்லை. (17979)

## உதயன்

# இழப்புகளைத் தாங்குவதற்கு...

எம்மைப் பொறுத்தவரை இழப்புகள் எமக்கு உந்து சக்திகளாகவே அமைந்திருக்கின்றன. அவை எமது வளர்ச்சிககும் உந்து சக்திகளாகும்.

இவ்வாறு விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் நேற்று முன்தினம் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்திருக்கிறார்.

இழப்பைப் பார்த்தால் போராட முடியாது. இழப்புகளுக்கு அஞ்சினால் போராட்டத்தையே கைவிடவேண்டும். எமக்கு ஏற்பட்ட இழப்புகள் எங்கள் உறுப்பினர்களின் உறுதியை வலுப்படுத்தி இருக்கின்றன—என்றும் அவர்பதில் அளித்திருக்கிறார்.

அந்தப் பதில், போராட்டத்தை வழிநடத்திச் செல்பவர் என்ற வகையில் அவரது மன உறுதியை, மனவலிமையை பிரதிபலிக்கிறது. அவரின் வழிகாட்டலில் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் போராளிகளும் அஞ்சா நெஞ்சமும், மனவலிமையும், தியாக உணர்வும் மிக்கவர்களாக இருப்பதற்கான காரணமும், இரகசியமும் அதுவே.

உண்மையைச் சொல்வதானால் மக்களில் பலருக்கு இன்னமும் அந்த மனப்பலம் வரவில்லை. உரிமைக்காகப் போராட வேண்டும். உரிமைகளை வென்றெடுக்க வேண்டும் என மனமார விரும்புபவர்கள் கூட, இழப்புக்களைக் கண்டு மனம் தளர்ந்து விடுகிறார்கள்.

இழப்புகள் அடிக்கடி ஏற்படும் போதும், தமக்குள் அவை வந்துவிடும் போதும் போராட்டத்திற்கு இடைவெளி ஒன்று இருக்கக் கூடாதா என்று மனம் பேதலிக்கிறார்கள்.

எமக்கென்று ஓர் அரசு, எமது மக்களின் பாதுகாப்பு எங்கள் பொறுப்பிலேயே இருக்க வேண்டும் என்றெல்லாம் அடிமனதில் விரும்புவோர் கூட, இழப்புகளைக் கண்டு மனச்சோர்வு அடைகிறார்கள். இது ஓர் உளவியல் பலவீனம். எல்லா மனிதர்களையும் பீடிக்க வல்லது.

இந்தப் பலவீனத்தை வென்று, அதற்கு அப்பாற்பட்ட ஒரு மனநிலையை அடைவதற்கு மக்களுக்குப் பயிற்சியும் உணர்வும் அவசியம். தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் போராளிகள் அடையும் மனநிலையை எய்தி விட்டால் அது இலகுவாகும். இழப்புக்களைக் கண்டு மனம் சோர்தலோ, தளர்தலோ, சலித்தலோ இடம் பெறாது; முன்வைத்த காலை பின்வைத்தால் என்ன என்ற சலன புத்தி ஏற்பட மாட்டாது.

அதாவது மக்கள் தங்கள் உரிமைகளைத் தாங்களே பாடுபட்டு, கஷ்டப்பட்டு, தியாகம் செய்து வென்றெடுக்க வேண்டும் என்ற உணர்வை வளர்த்துக் கொண்டு விட்டால் —

அதன் பின்னர் —

முன்னர் குறிப்பிட்ட உளவியல் பலவீனத்தை வெற்றி கொண்ட, அதனைத் தாண்டிய ஒரு நிலையை—

அதாவது போராளிகளின் மனநிலையை ஒத்த நிலையை எய்திவிடுவார்கள்.

இது குறித்து ஒவ்வொரு ஈழத் தமிழனும் சற்று நிதானமாகவும், மனப்பூர்வமாகவும் சிந்திக்கவேண்டும். இல்லையேல் இதுவரை இழந்தவற்றின் மதிப்பு கருகிப் போய் விடும். கஷ்டங்கள், இன்னல்கள், தியாகங்கள் பெறுமதியற்றவை ஆகிவிடும்.

# கட்டுவன் பகுதியில் மோதல்

யாழ்ப்பாணம், செப்.2

கட்டுவன் முகாமில் இருந்து நேற்று முன்தினம் இரவு 10-30 மணியளவில் முன்னேற முயன்ற படையினர்மீது புலிகள் தாக்குதல் தொடுத்தனர்.

புலிகளின் கடும் தாக்குதல் காரணமாக முன்னேற முடியாத படையினர் மீண்டும் காவலரண்களுக்குத் திரும்பினர்.

இதேவேளை அன்று இரவு 12 மணியளவில் மாவிட்டபுரம் முகாம் பகுதியில் காவலரண்களை அமைத்துக் கொண்டிருந்த படையினர் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தினர். சேத விவரங்கள் தெரியவரவில்லை.

இதனிடையில் நேற்று அதி

(4 ஆம் பக்கம் பார்க்க)

# 500 தற்கொலைப்படையினர் தமிழ்நாட்டினுள் ஊடுருவல்!

சென்னை, செப். 2

ஈழப் போராளிகள் என்று சந்தேகிக்கப்படும் சுமார் 500 பேர் கொண்ட தற்கொலைப் படையினர் தமிழ் நாட்டிற்குள் ஊடுருவி இருப்பதாக தமிழ் நாட்டுப் பொலீஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளதாம்.

இதனை அடுத்து தமிழ் நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் திரு. வாழப்பாடி ராமமூர்த்தி உட்பட பல தலைவர்களுக்கு பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

இந்த தற்கொலைப்படையினரில் 25 பேர் சென்னைக்குள் ஊடுருவி உள்ளனர் என்றும் காந்தன் என்பவரிடம் அதிரடித்தாக்குதல் நடத்தும் பணி ஒப்படைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதே சமயம் தமிழ் நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் திரு.வாழப்பாடி ராமமூர்த்தி, மத்திய அமைச்சர் ரங்கராஜன் குமாரமங்கலம் ஆகியோரைக் கடத்த முயற்சிகள் நடத்தப்பதாகவும் பொலீஸார் தெரிவித்தனர்.

போராளிகளின் கொலைப் பட்டியலில் வாழப்பாடி ராமமூர்த்தியின் பெயரும் இடம் பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது. (இ-5)

# கோமதேஸ்வரர் சிலையை தகர்ப்பதாக மிரட்டல்!

பெங்ளூர், செப். 2

கர்நாடக மாநிலம் இராவண பலகோலா என்னும் கிராமத்தில் அமைந்திருககும் ஜைன மதத்தூதர் கோமதேஸ்வரரின் சிலையைத் தாம் குண்டு வைத்துத் தகர்க்கப் போவதாக ஈழப் போராளிகள் என்று சந்தேகிக்கப்படும் குழு ஒன்று மிரட்டல் கடிதம் ஒன்றை எழுதியிருப்பதாக ஜைன மத வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கர்நாடகமாநிலத்தில் ஈழப் போராளிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதை ஆட்சேபித்து இந்த மிரட்டல் கடிதம் எழுதப்பட்டிருக்கலாம் என பொலீஸ் வட்டாரங்கள் சந்தேகம் தெரிவித்தன.

ஆயிரத்து பத்து ஆண்டுகளுக்கு முன்னால் நிறுவப்பட்ட இந்த கோமதேஸ்வரர் சிலை, கர்நாடக மாநிலத்தில் கலாசார முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக கருதப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

இம்மிரட்டலை அடுத்து அக்கிராமத்திற்கு பயணிகளும் பக்தர்களும் செல்வது தடை செய்யப்பட்டுள்ளது. (உ-எ)

# தென்பகுதியில் மீண்டும் ஜே. வி. பி. நடவடிக்கை

கொழும்பு, செப். 2

தென்பகுதியில் கடந்த சில நாட்களாக ஆங்காங்கே ஜே. வி. பி. நடவடிக்கைகள் தலைதூக்கியுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன.

பெலியந்தையில் ஜே. வி. பியினரால் நந்தசிறி என்பவரும், ருஷிகா ஜயகுமார் என்ற 9 வயதுச் சிறுமியும் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை—

களுத்துறைப் பகுதியில் ஜே. வி. பி. தலைவர் ஒருவர் கைது செய்யப்பட்டதை அடுத்து சிங்கராஜ காட்டுப் பகுதியைச் சேர்ந்த ருண்ணுகந்த என்ற இடத்தில் பெரும் தொகையான ஆயுதங்கள் பொலீஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன. ரி-56 தானாக இயங்கும் ரைபிள்கள் நான்கு, ஏ கே. 47 ரைபிள் ஒன்று, 84 எஸ் தானாக இயங்கும் ரைபிள் ஒன்று, எஸ்.எம் ஜி தானாக இயங்கும் துப்பாக்கி ஒன்று, மற்றும் பெரும் தொகையான வெடிமருந்து வகைகளே கைப்பற்றப்பட்டவை ஆகும்.

கைதானவர் வெலிப்பன பொலீஸ் பகுதியிலும், மத்துகம பொலீஸ் பகுதியிலும் ஜே. வி. பி. அரசியல் பிரிவுத் தலைவராகக் கடமை ஆற்றி இருந்தார் என்றும் பின்னர் களுத்துறைப் பொலீஸ் பிரிவில் ஜே. வி. பி. ராணுவப் பிரிவுத் தலைவராகவும் சிங்கராஜ காட்டில் ஜே. வி. பி. கெரில்லாப் பிரிவுத் தலைவராகவும் கடமை ஆற்றி இருந்தார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ)


## நல்லூர் உற்சவகாலச் சிறப்பம்சம்

### கருணை கூர்வாய்!

மண்மீது மேனி சாய்த்து
மனதிலுந்தன் நாமம்சேர்த்து
உன்வீதி உருண்டு வந்து
உளமுருகி அழுதுநொந்து
பண்சேர்த்து பதிகம் பாடும்
பக்தர் கூட்டம் மீதுனது
கண்மேவுங் கருணை கூர்வாய்
கந்தாகதிர் வேலாயுதனே.

[illegible]


# சோனியா பிரதமராவதை தடுக்க விசேஷ சட்டமூலம்

## பாரதிய ஜனதா கொண்டு வருகிறது

புதுடில்லி, செப். 2

பிறப்பால் இந்தியப் பிரசை அல்லாத ஒருவர் இந்தியாவின் ஜனாதிபதியாகவோ, உபஜனாதிபதியாகவோ, அல்லது பிரதமராகவோ வருவதைத் தடை செய்யும் சட்டமூலம் ஒன்றை விவாதிக்க இந்திய நாடாளுமன்றம் இணங்கியுள்ளது.

இச்சட்ட மூலத்தைக் கொண்டுவரப் போவதாக பாரதிய ஜனதா கட்சி முன்னறிவித்தல் கொடுத்திருக்கிறது.

சோனியா காந்தி, இந்திய அரசியல் தலைமைத்துவத்தைப் பெறும் முயற்சிகளைத் தடுப்பதே உத்தேச சட்டமூலத்தின் நோக்கம் என்று தெரிவிக்கப்படுகிறது.

1968 இல் ராஜீவ் காந்தியைத் திருமணம் செய்த சோனியா 1982 இல் இந்தியப் பிரசா உரிமையைப் பெற்றார்.

ராஜீவின் தாயாரான அப்போதைய பிரதமரான இந்திராகாந்தியுடன் வெளிநாட்டுப் பிரசை ஒருவர் வாழ்வதை எதிர்க்கட்சிகள் கண்டித்ததைத் தொடர்ந்தே இத்தாலியரான சோனியாவிற்கு இந்திய பிரசா உரிமை அப்போது வழங்கப்பட்டது. (இ-எ)

## காவிரி நீர் பிரச்சினை தீரும் வரை:

# தாடியை எடுக்க மாட்டேன்! சிவாஜிகணேசன் சபதம்

"காவிரி நீர்ப் பிரச்சினை தீரும்வரை நான் தாடியை எடுக்கப் போவதில்லை"

நடிகரும், ஜனதா தள் கட்சித் தலைவருமான திரு. சிவாஜிகணேசன் இவ்வாறு சபதமிட்டுள்ளார்.

கடந்த சில மாதங்களாக திரு. சிவாஜிகணேசன் தாடி வளர்த்து வருகிறார். இது பற்றி அவரிடம் கேட்கப்பட்டபோதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

காவிரி நீர்ப் பிரச்சினை சட்டரீதியான பிரச்சினை மட்டுமல்லஉயிர்ப்பிரச்சினை. காவிரி நீர்ப் பிரச்சினைக்காக நான் உயிரையும் கொடுக்கத் தயாராக உள்ளேன். இந்தப் பிரச்சினை தீரும்வரை நான் தாடி வளர்ப்பேன் என்றும் அவர் சொன்னார். [த]

## புதுடில்லி சென்றிருந்த சமயம்

# முதல்வர் ஜெயலலிதா, வாழப்பாடி இருவரையும் கொல்ல முயற்சி!

சென்னை, செப். 2

புதுடில்லியில் வைத்து ஜெயலலிதா, வாழப்பாடி இராமமூர்த்தி ஆகிய இருவரையும் கொலை செய்வதற்கு ஒற்றறக்கண் சிவராசன் சதித்திட்டம் தீட்டியிருந்தாராம்!

இவ்வாறு சென்னையில் இப்போது தகவல்கள் வெளியாகி உள்ளன.

கடந்த ஜூலை மாத முற்பகுதியில் பிரதமர் நரசிம்மராவைச் சந்திக்க ஜெயலலிதாவும், வாழப்பாடியும் புதுடில்லி சென்றிருந்தனர்.

அந்தச் சமயத்தில் அவர்கள் இருவரையும் கொலை செய்ய 72 வயதான சபாபதி என்பவரையும் மற்றும் நிசா என்றழைக்கப்படும் ஆதிரை (17 வயது) என்ற இளம் பெண்ணையும் சிவராசன் அனுப்பி இருந்தாராம்:

ஆனால் குறிப்பிட்ட தினத்திற்கு முன்னரே இருவரும்புதுடில்லி ஹோட்டல் ஒன்றில் வைத்து கைதுசெய்யப்பட்டு விட்டதால். சிவராசனின் முயற்சி கைகூடவில்லை என்றும் ராஜீவ் கொலை விசாரணையில் தெரியவந்துள்ளதாம். (ஒ-த)

# சென்னை பெரியாஸ்பத்திரியிலுள்ள "தாணு" உடலைக் கடத்த முயற்சி?

சென்லை, செப். 2

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியை வெடிகுண்டு வைத்துக் கொன்ற 'தாணு'வின் உடலைக் கடத்த முயற்சி நடந்ததாக அறிவிக்கப்படுகிறது. இதனைத் தொடர்ந்து, சி. பி ஐ. அதிகாரி போல் நடித்த ஒருவரைப் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

விசாரணைக்காகத் தேவைப்படும் என்று தாணுவின் உடல் பதப்படுத்தப்பட்டு சென்லை பெரியாஸ்பத்திரியில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. ஆஸ்பத்திரியில் பலத்த பொலீஸ் பாதுகாப்பும் போடப்பட்டுள்ளது.

கடந்த வாரம் தன்னை சி. பி. ஐ. அதிகாரி எனக் கூறிக்கொண்டு ஆஸ்பத்திரியில் தாணுவின் உடல் வைக்கப்பட்டிருந்த அறைக்குச் சென்ற ஒருவரை சந்தேகத்தின் பேரில் பொலீஸார் விசாரித்தனர். அப்போது அவர் போலி நபர் என்பது தெரியவந்ததும், அவர் கைது செய்யப்பட்டார். அதனைத் தொடர்ந்தே அவர் தாணுவின் உடலைக் கடத்த வந்தாரா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. (த)

## புலிகளுடன்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கள் மேலும் தெரிவித்தன.

"உத்சே பேச்சுவார்த்தைக்கான முயற்சிகள் சுமுகமாக நடந்தன. அரசு பெரும் அரசியல் நெருக்கடிக்குள் சிக்கும் வரை அமைச்சர் தொண்டமான் பேச்சுக்கான முயற்சியைச் சிறப்பாக முன்னெடுத்துச் சென்றார். ஆனால் இனி, எங்கள் அடுத்த நடவடிக்கை எப்படியிருக்கும் என்பதை இப்போது எங்களால் கூற முடியாது"- இப்படி சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் கூறினார்.

"அரசமைப்பு ரீதியான நெருக்கடிகளை அரசு எதிர்நோக்குவதால் சமாதானப் பேச்சுகள் காலதாமதமடையும். வடக்கில் இராணுவ நடவடிக்கை வழமை போல் தொடரும்"— இவ்வாறு அவர் மேலும் கூறினார்.

— இப்படி அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது (உ)

## வீழ்ச்சி

கொழும்பு, செப். 2

அரசியல் நெருக்கடிகளை அடுத்து கொழும்பில் பங்கு சந்தை வியாபாரம் கணிசமாக வீழ்ச்சியடைந்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3 வாரங்களுக்கு...

யிருப்பதாலேயே அவர் சபையை மூன்று வாரங்கள் மட்டும் இடைநிறுத்தினார்.

அந்தக் கால எல்லையின் முடிவில் சபையைக் கூட்டி அவசரகாலச் சட்ட நீடிப்புப் பிரேரணையை நிறைவேற்றா விட்டால், அவசரகாலச் சட்டம் காலாவதியாகிவிடும். அதனால் சட்ட ஒழுங்குப் பிரச்சினைகள் ஏற்படும்.

இதன் காரணமாகவே மூன்று வாரங்களுக்குமேல் சபையை இடைநிறுத்தி வைக்க முடியாத நிலை ஜனாதிபதிக்கு ஏற்பட்டதாக சட்டத்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

# மரண அறிவித்தல்கள்

## தம்பிராசா சண்முகலிங்கம்

புங்குடுதீவு 1 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த தம்பிராசா சண்முகலிங்கம் (அதிபர் புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம்) அவர்கள் காலமாகிவிட்டார். இவர் காலம் சென்ற தம்பிராசா - செல்லம்மா ஆகியோரின் அன்பு மகனும், முத்தம்மா (அதிபர் சேர் துரைசுவாமி வித்தியாலயம், புங்குடுதீவு), அவர்களின் அன்புக் கணவரும், திரு. திருமதி சுப்பிரமணியத்தின் அன்பு மருமகனும், தயாளினி, தர்சினி, கிராஞ்சிதரன், வியாகேஸ்வரன், குறிஞ்சிதரன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், கோகிலநாதனின் மாமனாரும். திருமதி குணமணிதேவியின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 1 ஆம் வட்டார இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (2 - 9 - 91) காலை 10 மணிக்கு மணற்காடு மயானத்தில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
ஏ. தம்பு (சகலன்)

(C/0359)

## சுவாம்பிள்ளை புண்ணியசிங்கம் ஞானப்பிரகாசம்

வீமன்காமம் தெல்லிப்பளையைச் சேர்ந்த சுவாம்பிள்ளை புண்ணியசிங்கம் ஞானப்பிரகாசம், [இளைப்பாறிய தலைமை ஆசிரியர்] 01 - 09 - 91 இல் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற இராசமணி [இளைப்பாறிய ஆசிரியை திருக்குடும்ப கன்னியர் மடம் யாழ். நகர்] அன்புக் கணவரும், திருமதி றூபி யோண் [ஆசிரியை, இளவாலைக் கன்னியர் மடம்], திருமதி டெய்சி அன்ரனி, காலஞ்சென்ற புவிமன்னன் [ஞான மண்ணை], அலோசியஸ் ஜெயமண்ணன், திருமதி பத்மினி மகேசன், செல்வி மேசி ஜெயராணி [ஆசிரியை புனித திரேசாள் மகளிர் கல்லூரி அச்சுவேலி], திருமதி பாமா முல்க்ராச் ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. யோண் யோச் [S. P. H. I. மானிப்பாய்], திரு. அன்ரனி [சிமெந்து கூட்டுத் தாபனம் காங்கேசன் துறை], திருமதி டெறின் [சூராவத்தை], திரு. முல்க்ராச் [சவுதி], Dr. மகேசன் [பொகவந்தலாவ] ஆகியோரின் அருமை மாமனாரும், றோய், றீனி, றியன்சி, றமினி, குறனோல்ட், றாகினி, றீவ்ஸ், மதியழகன், கலைவாணி, பொபி, பேட்டி, பெனி, மாலினி, பாமினி, மினோ, றொணி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று திங்கட்கிழமை [02 - 09 - 91] பிற்பகல் 3 மணி அளவில் சூராவத்தை இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு ஏழாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
அன்ரனி

சூரர்வத்தை,
சுன்னாகம்.

[18003]

## அப்பாப்பிள்ளை கைலாயபிள்ளை

குரும்பசிட்டியை வசிப்பிடமாகக் கொண்ட அப்பாப்பிள்ளை கைலாயபிள்ளை [முன்னாள் களஞ்சியக் காப்பாளர் - லிப்டன்] நாவற்குழியில் காலமானார்.

அன்னார் அன்னம்மாவின் அன்புக் கணவரும், மனோன்மணி, தவமணி திருச்செல்வம் [அவுஸ்திரேலியா] ஆகியோரின் அன்புத் தந்தையும், சின்னத்தம்பி [நிதியுதவியாளர் கோட்டக்கல்வி, யாழ்ப்பாணம்], கனகசுந்தரம், சரோஜா (அவுஸ்திரேலியா] வின் மாமனாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [02-09-91] பி. ப. 1. 00 மணிக்கு நாவற்குழியில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார். உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சின்னத்தம்பி [மருமகன்]

[17691]

## உற்சவகால நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், செப். 2

நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு நடைபெறும் இசை மற்றும் சமய அரங்குகளில் இன்று திங்கட்கிழமை மாலை இடம்பெறவுள்ள நிகழ்ச்சிகள் வருமாறு:-

★ நாவலர் மணி மண்டபத்தில் — சங்கீத பூஷணம் எஸ். திலகநாயகம் போலின் இன்னிசைக் கச்சேரி.

★ கம்பன் கோட்டத்தில் — திரு. வ. பரமசாமி, திரு. எஸ். குமாரசாமி ஆகியோரின் இன்னிசைக் கச்சேரிகள்,

★ ஆதீன குருமூர்த்தி ஆலயத்தில் — திரு. ந. சிவசண்முகமூர்த்தி நிகழ்த்தும் 'கந்தரனுபூதி' கதாப்பிரசங்கம்;

★ மேற்குவீதி பிள்ளையார் கோவிலில் —கானகதாவாரிதி வை. நித்தியானந்த சர்மா நிகழ்த்தும் கம்பராமாயணம் தொடர் விரிவுரையில் ''கண்டேன் சீதையை''.

(அ-126-30)

## உசிலைமணியின் இரு கால்களும் அகற்றப்பட்டன

சென்னை, செப். 2

நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டிருந்த நடிகர் உசிலைமணியின் இரு கால்களும் அண்மையில் சத்திர சிகிச்சை மூலம் அகற்றப்பட்டன.

ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வரும் உசிலைமணியை தமிழக காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி பார்வையிட்டார். வைத்திய செலவுக்கென 10 ஆயிரம் ரூபாவை வாழப்பாடி அவருக்கு வழங்கினார்.

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், செப். 2

யாழ். மாவட்ட ப. நோ. கூ. சங்க பொதுமுகாமையாளர்களுக்கான கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ். ப. நோ. கூ. சங்க மண்டபத்தில் நடைபெறும். (த)

## சிங்கப்பூரில் ஆளும்கட்சி வெற்றி

சிங்கப்பூர், செப். 2

சிங்கப்பூர் பொதுத் தேர்தலில் ஆளும் மக்கள் நடவடிக்கைக் கட்சிக்கு 77 ஸ்தானங்களும் எதிர்க்கட்சிகளுக்கு 4 ஸ்தானங்களும் கிடைத்தன.

மொத்தம் 81 தொகுதிகளில் நியமன தினத்தன்று 40 தொகுதிகளில் ஆளும் மக்கள் நடவடிக்கைக் கட்சி போட்டியின்றித் தெரிவானது.

கடந்த சனிக்கிழமை தேர்தல் நடைபெற்ற மிகுதி 41 தொகுதிகளில் நான்கு தொகுதிகளை விட ஏனையவற்றை ஆளும் கட்சி கைப்பற்றி உள்ளது.

இந்த நான்கு தொகுதிகளில் சிங்கப்பூர் ஜனநாயகக் கட்சி 3 தொகுதிகளிலும் தொழிலாளர் கட்சி ஒரு தொகுதியிலும் வெற்றியீட்டின.

## கட்டுவன்...

[3 ஆம் பக்கத் தொடர்ச்சி]

காலை 3 மணிமுதல் கீரிமலைப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. (ஒ-3)

# எம். பிக்கள் பாதுகாப்புக்கு சபாநாயகர் ஏற்பாடு

கொழும்பு, செப். 2

ஜனாதிபதி பதவியில் இருந்து திரு. பிரேமதாஸாவைப் பதவி நீக்கம் செய்யக்கோரும் பிரேரணையில் கையொப்பம் வைத்துள்ள எம். பிக்களின் பாதுகாப்புக் குறித்து சபாநாயகர் பொலீஸ் மா அதிபரின் கவனத்துக்குக் கொண்டு வந்திருக்கிறார்.

பொலீஸ் மா அதிபர், சபாநாயகரைப் பின்னர் சந்தித்து எந்த ஒரு எம். பியும் அச்சப்படத் தேவையில்லை என்று உறுதி கூறியிருக்கிறார்.

இத் தகவலை முன்னாள் அமைச்சரும், ஐ.தே.க. எம். பியுமான திரு. காமினி திஸநாயக்கா கொழும்பில் செய்தியாளர் மாநாடு ஒன்றில் தெரிவித்தார்.

அச்சுறுத்தலுக்குள்ளாகும் எம். பி. எவரும் நேராக பொலீஸ்மா அதிபருக்கு முறையிட முடியும் என்றும் திரு. காமினி திஸநாயக்கா கூறினார். (உ-எ)

# ஜனாதிபதி செயலகத்தில் அரச எம்.பிக்கள் கூட்டம்

கொழும்பு, செப். 2

ஆளும் ஐக்கிய தேசிய கட்சி எம்.பிக்களின் கூட்டம் இன்று மாலை 4 மணியளவில் ஜனாதிபதி செயலகத்தில் உள்ள கேட்போர் கூடத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இத்தகவலை அரச நாடாளுமன்றக் கொறடாவும், நாடாளுமன்ற விவகார அமைச்சருமான வின்சென்ட் பெரேரா வெளியிட்டார்.

இதற்கிடையில்—

நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தை நாடாளுமன்ற கட்டடத்துக்கு வெளியே நடத்த முயற்சிக்கும் செயல் ஏற்க முடியாத ஒன்று என முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத் முதலி கண்டனம் தெரிவித்திருக்கிறார். (உ-எ-த-3)

# சோதிடமும் பார்த்தார்கள்!

கொழும்பு, செப். 2

பிரேமாவை பதவி நீக்கக் கோரும் பிரேரணையை ஒழுங்குபடுத்தியவர்கள் கிரக மாற்றங்கள் குறித்தும் அதிக அக்கறை காட்டினார்களாம்!

சோதிடம் பார்த்தே பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டதாக கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

திருமதி சிறிமாவோ பண்டார நாயக்கா சோதிடர்களைக் கொண்டு நல்ல நேரம் கணித்து, அந்த நேரத்தில் தான் பிரேரணையில் கையெழுத்திட்டாராம்.


யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

டிராக்டர் வண்டிகளை வாடகைக்கு அமர்த்துவதற்கும், கைவண்டில்கள் மற்றும் நீற்றுச் சுண்ணாம்பு விநியோகத்திற்குமான

கூறுவிலை அறிவித்தல்

01. குப்பை கூழங்களை அகற்றுவதற்குரிய கைவண்டில்களைக் கொள்வனவு செய்தல்.
02. குப்பை கூழங்களையும் மற்றும் கழிவுப்பொருள்களையும் அகற்றும் பணிக்குப் பயன்படுத்துவதற்காக இழுவைப் பெட்டியுடன் கூடிய டிராக்டர் வண்டிகளை வாடகைக்கு அமர்த்துதல்.
03. சபையின் பாவனைக்குத் தேவையான நீற்றுச் சுண்ணாம்பினைக் கொள்வனவு செய்தல்.

கைவண்டி விநியோகத்திற்கு மீளளிக்கப்படக் கூடிய பிணைப்பணமாக ரூபா 250/-உம் படிவக் கட்டணமாக ரூபா 25/-உம் செலுத்துவதன் பேரிலும், ஏனைய இரண்டிற்கும் கட்டணம் ஏதுமின்றி 1991-09-09 ஆம் திகதி பிற்பகல் 3-00 மணிவரை மாநகரசபையின் வேலைப்பகுதி அலுவலகத்தினால் வழங்கப்படும் படிவங்களில் கூறுவிலைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட கூறுவிலைப் படிவங்கள் 1991-09-11ஆம் திகதி நண்பகல் 12-00 மணிவரையும் ஏற்றுக் கொள்ளப்படும்.

மேலதிக விவரங்களை மாநகரசபையின் வேலைப் பகுதிப் பொறியியலாளரிடம் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
29-08-1991.

[சி-0451]



COMPLAN காம்ப்ளான் R

குழந்தைகள், கர்ப்பிணிகள், முதியோர் அனைவருக்குமானது. இழந்த ஊட்டத்தைப் பூர்த்தி செய்ய 22 அத்தியாவசியமான ஊட்டச் சத்துக்கள் அடங்கியது.

COMPLAN திட்டமிட்ட பரிபூரண உணவு.

3 நாவிற்கினிய சுவைகளிலே கிடைக்கிறது.

[சி-0267] GLAXO [CEYLON] LTD.,


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேட்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 02-09-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org